ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1899/13 - 2015 ජනවාරි මස 28 වැනි බදාදා - 2015.01.28

*1899/13 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் நெடுந்தீவு பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக நெடுந்தீவு பிரதேச சபையின் துணைத் தவிசாளரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், செபஸ்தி பேதுறு அருளப்பு என்னும் பதவி வகித்த துணைத் தவிசாளர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான நெடுந்தீவு பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. மரியசெபஸ்ரியாம்பிள்ளை அமலடொறின் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது நெடுந்தீவு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பொன்னுத்துரை குகநாதன் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. மரியசெபஸ்ரியாம்பிள்ளை அமலடொறின் என்பவர், நெடுந்தீவு பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*பொ. குகநாதன்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*நெடுந்தீவு பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்,*
*2015, சனவரி 27.*

*2 - 312*

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்**

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

**பூநகரி பிரதேச சபை**

*பூநகரி பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. பொன்னம்பலம் சிறிஸ்கந்தராசா அவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியின் உறுப்பினராக உள்ளமை இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென பூநகரி பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பொன்னுத்துரை குகநாதன் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின்கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

பொ. குகநாதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பூநகரி பிரதேச சபை.

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2015, சனவரி 26.*

*2 - 313*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.